*கவனிக்க.-2023.03.10 ஆந் திகதிய 2323 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி IV (அ) (தமிழ்மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2324 - 2023 මාර්තු මස 17 වැනි සිකුරාදා - 2023.03.17

*2324 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 30 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023 மாச்சு மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


29 - B 082437- 353 (2023/03)

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்
## ( அதன் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் கொழும்பில் நடைபெறுகின்றது)

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழ் கொழும்பு 07, கிரெகரி வீதி, இல. 67ஏ எனும் முகவரியில் அமைந்துள்ளதும் கம்பனி பதிவு இல. PV121730 கொண்டுள்ளதுமான ஒபோர்டோ டிவலப்மன்ட் ( பிறைவட்) லிமிடட் எனும் நிறுவனத்தை கௌரவ நீதிமன்றத்தினால் கலைப்பு செய்வதற்கான கட்டளையை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பம் விடயம் தொடர்பானது.*

வழக்கு இலக்கம்: CHC/16/2022/CO
தன்மை: கலைப்பு செய்தல்

ஸ்டேசன் எக்ஸ்போர்ட்ஸ் ( பிறைவட்) லிமிடட் , இல. 833,சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, த.பெ.1970, கொழும்பு 14.

*மனுதாரர்*

*மேல் மாகாணத்தில் வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனத்தினை கலைப்பு செய்வதற்கான மனுவொன்று, 2022, மாச்சு மாதம் 30 ஆந் திகதி குறித்த நீதிமன்றத்திற்கு மனுதாரர் சார்பாக சட்டத்தரணி கே. உபேந்த்ர குணசேகர என்பவரினால் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த மனு 2023, மே மாதம் 22 ஆந் திகதி நீதிமன்றம் முன்னிலையில் விசாரணைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமையினால், குறித்த மனுவின் அடிப்படையில் கட்டளையை பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அல்லது அதற்கு எதிராக செயற்படுவதற்கு அல்லது ஆதரவளிப்பதற்கு குறித்த நிறுவனத்தின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் இருப்பார்களாயின் அந்த குறித்த நபருக்கு தற்போதைய செயற்பாடுகளுக்காக அவற்றை விசாரணை செய்வதற்கு உட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும், மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

ஒப்பம்: திரு. உபேந்த்ர குணசேகர,
மனுதாரரின் சட்டத்தரணி,
இல. 135- 1/3, குணசிங்கபுர அலுவலகக் கட்டிடம்,
புனித செபஸ்தியன் வீதி, கொழும்பு 12.

**குறிப்பு**: *அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது தோற்றுவதற்கு எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட திரு. கே. உபேந்த்ர குணசேகர, சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின் ) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன் 2023, மே மாதம் 21ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு ( மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு ) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.*

*03- 230*

## நிறுவனத்தை கலைப்பு செய்தல் தொடர்பான அறிவித்தல்

### மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் (கொழும்பில் நடைபெறுகின்றது) குடியியல்/வர்த்தக நியாயாதிக்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழ், கொழும்பு 13, ஜோர்ஜ் ஆர் த சில்வா மாவத்தை, இல. 297/ 2 எனும் முகவரியில் அமைந்துள்ள கம்பனி பதிவு இல. PV 1335 கொண்டுள்ள ஈஸ்ட் வெஸ்ட் மார்க்கட்டிங் ( பிறைவட்) லிமிடட் எனும் கம்பனியை ஒடுக்குதல் விதிகளின் கலைப்பு செய்தல் பற்றிய வேண்டுகோள் தொடர்பான விடயம் தொடர்பானது.

சீ டீ த பொன்சேகா அன்ட் சன்ஸ் (பிறைவட்) லிமிடட், இல. 37, எலுவில, பாணந்துறை.

வழக்கு இலக்கம்: CH/54/2022/CO
தன்மை: கலைப்பு செய்தல்
(ஒடுக்குதல்)

மனுதாரர்

மேல் மாகாணத்தில் வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனத்தினை ஒடுக்குவதற்காக 2022, நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி மனுவொன்று கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்தி கொழும்பில் நடாத்தப்படும் மேல் மாகாண மேல் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதெனவும், குறித்த மனு தொடர்பான விசாரணை 2023, ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி நியமிக்கப்பட்டுள்ளதெனவும், அம்மனு தொடர்பில் கட்டளையொன்றை செய்வதற்காக உதவுவற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக விசாரணையின் போது தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும், மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவு தொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒப்பம்: ஜே. சஜுனி செனவிரத்ன,
மனுதாரரின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி,
இல. 391, - 2/2, புதுக்கடை, கொழும்பு 12.

**குறிப்பு**: அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது தோற்றுவதற்கு எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின் ) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன் 2023, ஏப்பிறல் மாதம் 02ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு ( மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு ) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

03- 231/1

## நிறுவனத்தை கலைப்பு செய்தல் தொடர்பான அறிவித்தல்

### மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் (கொழும்பில் நடைபெறுகின்றது) குடியியல்/வர்த்தக நியாயாதிக்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல்

வழக்கு இலக்கம்: CH/55/2022/CO
தன்மை: கலைப்பு செய்தல் (ஒடுக்குதல்)

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழ், கொழும்பு 13, ஜோர்ஜ் ஆர் த சில்வா மாவத்தை, இல. 297/ 2 எனும் முகவரியில் அமைந்துள்ள கம்பனி பதிவு இல. PV 1335 கொண்டுள்ள ஈஸ்ட் வெஸ்ட் மார்க்கட்டிங் (பிறைவட்) லிமிடட் எனும் கம்பனியை ஒடுக்குதல் விதிகளின் கீழ் கலைப்பு செய்தல் பற்றிய வேண்டுகோள் தொடர்பான விடயம் தொடர்பானது.

சீ.டீ.டீ.ஈ.எப் மெனுவெக்சரர்ஸ் அன்ட் மர்சன்ட்ஸ் ( பிறைவட்) லிமிடட், இல. 37, எலுவில, பாணந்துறை.

மனுதாரர்

மேல் மாகாணத்தில் வர்த்தக மேல் நீதிமன்றத்தினால் மேற் குறிப்பிடப்பட்ட நிறுவனத்தினை ஒடுக்குவதற்காக 2022, நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி மனுவொன்று கொழும்பில் நடைபெறுகின்ற மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் நீதிமன்ற அதிகாரத்தை நடைமுறைப்படுத்தி கொழும்பில் நடாத்தப்படும் மேல் மாகாண மேல் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதெனவும், குறித்த மனு தொடர்பான விசாரணை 2023, ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி நியமிக்கப்பட்டுள்ளதெனவும், அம்மனு தொடர்பில் கட்டளையொன்றை செய்வதற்காக உதவுவற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக விசாரணையின் போது தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியும் எனவும், மனுவின் பிரதியொன்றை தேவைப்படுத்துகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவு தொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒப்பம்: ஜே. சஜுனி செனவிரத்ன,
மனதாரரின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி,
இல. 391- 2/2, புதுக்கடை, கொழும்பு 12.

**குறிப்பு**: அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது தோற்றுவதற்கு எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்ப வேண்டும். அறிவிக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின் ) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன் 2023, ஏப்பிறல் மாதம் 02ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின் அவர்களுக்கு ( மேலே குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு ) மேற்குறித்த திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு போதுமான காலநேரத்துடன் அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

03- 231/2

**குடியியல் (வணிக) நியாயாதிக்கத்தைக் கொண்ட**
**மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் (கொழும்பில் அமையப்பெற்றது)**

இல.117/10, ஹுணுப்பிட்டிய, லேக் வீதி, கொழும்பு 02 இல் அமைந்துள்ள VOICE OF ASIA NETWORK (PRIVATE) LTD விடயத்திலும்,

ஒடுக்குவதற்கான
விண்ணப்ப இலக்கம்: 9/ 2023/ CO

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழ், நீதிமன்றத்தினால் ஒழுக்குவதற்கான ஓர் விண்ணப்பம் .

DFCC Bank PLC, இல. 73/5, காலி வீதி, கொழும்பு 03 மற்றும் இல. 73, W.A.D. இராமநாயக்க மாவத்தை, கொழும்பு 02

மனுதாரர்

மேற் கூறப்பட்ட கம்பனியை கொழும்பில் அமையப்பெற்ற மேல் மாகாண மேல் நீதிமன்றத்தினால் ஒடுக்குவதற்கான மனு 2023ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதியன்று கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வங்கியால் குறித்த நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டதென அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

DFCC Bank PLC,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 03 மற்றும்
இல. 73,W.A.D. இராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 02.

குறித்த மனுவானது 2023 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி குறித்த நீதிமன்றத்துக்கு முன் விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ள தென்றும், மேற்குறித்த மனு சம்பந்தமாக மேற்குறித்த கம்பனிக்கு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவர் எவராவது குறித்த மனு தொடர்பில் கட்டளை பிறப்பிப்பதை ஆதரவு அல்லது எதிர்க்க விரும்புவாராயின் விசாரணையின் போது நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது அக்காரணத்திற்காக பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோற்றலாம் எனவும் மேற்படி கம்பனிக்கு எந்தவொரு கடன்கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவருக்குத் தேவைப்படின் மனுவின் ஒரு பிரதி அதற்கென அறவிடப்பட்டுள்ள கட்டணத்தை செலுத்தி கீழ்க் காட்டப்பட்டுள்ளவரின் கையொப்பமிடப்பட்டவரின் கையொப்பத்துடன் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

தேஜக்க பெரேரா,
மனுதாரரின் சட்டத்தரணி,
இல. 73, W.A.D. இராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 02.

**குறிப்பு**: மேற்குறித்த மனுவின் விசாரணையின் போது நேரில் சமுகமளிக்க எவராவது நோக்கம் கொள்வதாயின் அவர்/அவள்/அதன் நோக்கத்தை அறிவித்தல் மூலம் எழுத்தில் தெரிவித்து மேற்குறித்த சட்டத்தரணியான திரு. தேஜக்க பெரேரா அவர்களுக்கு நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் சேர்ப்பிக்க வேண்டும். குறித்த அறிவித்தல் நபர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் அல்லது கம்பனியாக இருப்பின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அல்லது அவரின்/அதன் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி இருப்பின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியின் பெயர் என்பவற்றை குறித்து மேற்குறித்தவருக்கு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பப்படுவதாயின் போதிய கால அவகாசத்துடன் 2023ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி பி.ப. 6.00 மணிக்கு பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தேஜக்க பெரேரா,
மனுதாரரின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி.

03- 229

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.